**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.228/2012**

2025—ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3—ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W.1 சாந்தி, வயது 58, க/பெ வெங்கட ரத்தினம்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (பிரதிவாதிகள் 1 மற்றும் 2 தரப்பு)**

என் மாமனார் வாங்கிய வா.சா.ஆ.1 மற்றும் என் கணவர் வாங்கிய வா.சா.ஆ.2 யாரிடமிருந்து வாங்கினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 கிரைய பத்திரம் யார் கிரையம் கொடுத்தார்கள் என்றால் தங்கவேல் என்பவர் கொடுத்தார். மேற்படி தங்கவேல் தற்போது உயிருடன் இல்லை. ஆனால் அவரின் வாரிசுதாரர்கள் உள்ளார்கள். மேற்படி வாரிசுதாரர்கள் தற்போது நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியம் அளிக்க வருவார்களா என்றால் வருவார்கள். இவ்வழக்கில் நான் 2ம் பிரதிவாதிக்கு எதிராக எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான்.

2. இவ்வழக்கை நான் வழிப்பாதைக்காக தாக்கல் செய்தேனா அல்லது நடைப்பாதைக்காக தாக்கல் செய்தேனா என்றால் வழிப்பாதைக்காக நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். இவ்வழிப்பாதையை பற்றி FMB தனியாக குறிப்பிட்டு சொல்லி உள்ளார்களா என்றால் சொல்லி உள்ளார்கள். தாவாவில் பி அட்டவணை சொத்தில் வழிப்பாதை எவ்வளவு நீளம் என்று குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் குறிப்பிட்டு சொல்லி உள்ளேன். தாவா பி அட்டவணை சொத்தின் மேற்படி நீளம் பற்றி குறிப்பிடவில்லை என்றாலும் தற்போது நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழிப்பாதையை பற்றி சொல்லியுள்ளேன்.

3. தாவா பி அட்டவணை சொத்தின் சர்வே எண். 153/5B யாருக்கு பாத்தியப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா பி அட்டவணை சொத்தின் சர்வே எண். 153/4 யாருக்கு பாத்தியப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி இரண்டு சர்வே எண்களும் 1, 2 பிரதிவாதிகளுக்கு ஆதியில் இருந்து பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 1, 2 பிரதிவாதிகள் அவர்கள் தந்தை காலத்திலிருந்து அனுபவித்து வந்த சொத்தைதான் தற்போதும் அப்படியே அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் வைத்திருந்த சொத்தில்தான் நாங்கள் வழிப்பாதையாக உபயோகித்தோம்.

4. 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு மேற்கு பக்கம் பெங்களூரை சேர்ந்த நபரின் நிலம் உள்ளது என்றாலும், அதை வனராஜன் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி சொத்தில் போகாமல் 1ம் பிரதிவாதிக்கு சொத்திற்கு போக முடியாது என்றால் சரிதான். அதை தாண்டிதான் போக வேண்டும். வனராஜன் சொத்தில் வழிப்பாதை உள்ளதா என்றால் உள்ளது. இவ்வழக்கில் வழக்கறிஞர் ஆணையர் வந்த பார்த்ததில் ஆணையர் அறிக்கையில் வனராஜன் சொத்தில் வழிப்பாதை உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லி உள்ளார்களா என்றால் சொல்லி உள்ளார்கள்.

5. இவ்வழக்கில் உரிமையாளரான பெங்களூரை சேர்ந்த நபரையோ (அவர் பெயர் தெரியவில்லை) அவர் சொத்தை அனுபவித்து வரும் வனராஜனை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். தற்போது வனராஜன் சொத்தில் 15 அடி வழிப்பாதை உள்ளதா என்றால் இல்லை. வழக்கை தாக்கல் செய்த போது 15 அடி வழிப்பாதை இருந்தது. ஆனால் தற்போது நடைப்பாதை மட்டும் உள்ளது. மேற்படி பெங்களூரை சேர்ந்த நபரையோ (அவர் பெயர் தெரியவில்லை) அவர் சொத்தை அனுபவித்து வரும் வனராஜனையோ தாவாவில் 15 அடி வழிப்பாதை கோரி பரிகாரம் கேட்டு வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி நபர்கள் எனக்கு இடையூறு செய்யாத காரணத்தால் நான் அவர்களை தரப்பினராக சேர்க்கவில்லை.

6. மேற்படி விவரங்களை தாவா வாதுரை மற்றும் முதல் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். ஆனால் தாவா வாதுரை மற்றும் முதல் விசாரணையில் குறிப்பிடாமல் தற்போது நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். தாவா வழிப்பாதை எங்கிருந்து ஆரம்பிக்கிறது என்றால் பஜனைக் கோயில் வழியாக சென்று சேஷாசலம் நிலத்தின் வழியாக சென்று, குப்புசாமி நிலத்தின் வழியாக சென்று பின்னிட்டு என் நிலத்திற்கு செல்ல முடியும்.

7. மேற்படி பஜனை கோயில் நிலத்தை தாண்டியவுடன் பெங்களூரை சேர்ந்தவர் நிலம் உள்ளது என்றால் பஜனை கோயிலை தாண்டியவுடன் ஒரு ஓடை வரும். பிறகு சேஷாசலம் நிலத்தின் வழியாக சென்று, குப்புசாமி நிலத்தின் வழியாக சென்று பின்னிட்டு என் நிலத்திற்கு செல்ல முடியும். ஓடை தற்போது எவ்வளவு அகலம் இருக்கும் என்றால் 10 அடிக்கு மேல் இருக்கும். ஏரியிலிருந்து வரும் தண்ணீர் அந்த ஓடை கால்வாய் வழியாக சென்று ஒண்டிகுடிசை கிராமத்திற்கு செல்லும் என்றால் சரிதான். பள்ளிக்கூடத்திற்கும், பஜனை கோயிலுக்கும் எவ்வளவு அகலம் என்றால் 30 அடி அகலம் இருக்கும்.

8. தற்போது பள்ளிக்கூட காம்பவுண்டிற்கும், பஜனை கோயிலுக்கும் எவ்வளவு அகலம் என்றால் 10 அடி அகலம் இருக்கும். என்னுடைய முதல் விசாரணை பத்தி 5ல் அக்டோபர் 2009 ஆண்டு தாவா 'அ' அட்டவணை சொத்தில் காட்டப்பட்ட பொது வழிபாதையை 1ம் பிரதிவாதி அழித்து விட்டார் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் என் கணவர் உயிருடன்தான் இருந்தார். அது சம்மந்தமாக 1ம் பிரதிவாதி மீது காவல் நிலையத்தில் புகாரோ, வழக்கறிஞர் அறிவிப்போ கொடுத்தாரா என்றால் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினோம். மேற்படி அறிவிப்பு நகலை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். ஆனால் மேற்படி நகலை தாக்கல் செய்யாமல் தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9. என் கணவர் 26.10.2009ம் ஆண்டு 11ம் பிரதிவாதியிடம் புகார் அளித்தார், மேற்படி புகாரினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். ஆனால் மேற்படி புகாரினை தாக்கல் செய்யாமல் தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் குறிப்பிட்டுள்ள 'அ' அட்டவணை சொத்திற்கு நில உரிமை மேம்பாடு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பட்டா இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

ஆனால் மேற்படி பட்டாவை தாக்கல் செய்யாமல் தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதுரை பத்தி 5ல் தாவா 'அ' அட்டவணை சொத்தில் பயிர் வைக்க முடியவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

10. தற்போது வழக்கறிஞர் ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு அவர் அறிக்கையில் தாவா 'A' அட்டவணை சொத்தில் பயிர் வைத்திருந்ததாகவும், 'B' அட்டவணை சொத்தில் பயிர் வைக்காமல் இருந்ததாகவும் குறிப்பிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. பயிர் வைக்க முடியாது. என் நிலத்திற்கு பக்கத்தில் எந்த ஊர் ஏரி உள்ளது என்றால் ஒண்டிகுடிசை ஏரி உள்ளது. அந்த ஏரிக்கரையிலிருந்து என் நிலத்திற்கு இறங்கி செல்ல முடியும் என்றால் சரிதான். ஆனால் கடந்த 3 வருட காலமாகதான் மேற்படி ஏரிக்கரையிலிருந்து என் நிலத்திற்கு இறங்கி செல்ல முடியும். அதற்கு முன்பு அவ்வாறு இல்லை.

11. மேற்படி ஏரிக்கரை வழியாக சென்றுதான் எங்கள் நிலத்தில் பயிர் வைத்தோம் என்றால் சரிதான். எங்கள் நிலத்திற்கு தாவா 'B' அட்டவணை சொத்தில் தவிர்த்து வேறு வழியாக செல்ல முடியும் என்றால் சரியல்ல. தாவா சொத்தை தாக்கல் செய்த வழியில்தான் செல்ல முடியும். 3 முதல் 9 பிரதிவாதிகள் எனக்கு ஆதரவாக சாட்சியம் அளிப்பார்களா என்றால் சாட்சியம் அளிப்பார்கள். பிறகு அவர்களை பிரதிவாதி தரப்பினர்களாக சேர்த்துள்ளேன் என்றால் அவர்கள் யாரும் வழக்கை நடத்த வராத காரணத்தினால்தான் பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன்.

12. தாவா 'B' அட்டவணையில் வழிப்பாதை இல்லாத காரணத்தால்தான் பிரதிவாதிகள் 3 முதல் 9 வரையானவர்கள் இவ்வழக்கை தாக்கல் செய்ய வரவில்லை என்றால் சரியல்ல. என் நிலத்தில் நான் வீடு கட்டி அங்கு வசித்து வருகிறேன் என்றால் சரிதான். சாட்சி தற்போது தன்னிச்சையாக எங்கள் நிலத்தில் வீடு இல்லை என்று சாட்சியம் அளிக்கிறார். வாதுரையில் 6ம் பத்தியில் வருவாய் துறை அதிகாரிகளிடம் இந்த வழி சம்மந்தமாக பலதடவை வாய் மொழி மற்றும் எழுத்து மூலமாகவும் புகார் அளித்தோம் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். ஆனால் மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யாமல் தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

13. என்னிடம் காண்பிக்கப்படும் பி அட்டவணை சொத்தில் சர்வே எண். 153 வா.சா.ஆ.9 FMB பற்றி எனக்கு தெரியுமா என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு எனக்கு புரியவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார். என்னிடம் காண்பிக்கப்படும் ஏ மற்றும் பி அட்டவணை சொத்தில் வா.சா.ஆ.8 FMB பற்றி எனக்கு தெரியுமா என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு சர்வே எண் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 2 ஆவணங்களை எதற்காக நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் நிலத்திற்கு செல்லும் வழிப்பாதையை எடுத்து விட்டதால் நான் இவ்வழக்கில் மேற்படி 2 ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன்.

14. மேற்படி 2 ஆவணங்களும் வழக்கு தாக்கல் செய்த பின்னர் பெறப்பட்ட ஆவணங்கள் என்பதால் மேற்படி ஆவணங்கள் சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள பத்தி 4ல் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழிப்பிரச்சினை சம்மந்தமாகதான் வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினார். வழிப்பாதை மற்றும் ஏரிக்கால்வாய் வேண்டும் என்று கோரிதான் வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினோம் என்றால் சரிதான். ஆனால் இவ்வழக்கு ஏரிக்கால்வாய் சம்மந்தமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழிப்பாதை மற்றும் ஏரிக்கால்வாய்க்கும் சேர்த்து பரிகாரம் கோரிதான் வழக்கு தாக்கல் செய்தோம்.

15. நான் மேற்படி பரிகாரங்களை கோரி இவ்வழக்கை தாக்கல் செய்யாமல் தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1 மற்றும் 2 பிரதிவாதிகள் நிலத்தில் உள்ள வரப்பு வழியாக செல்ல முடியும் என்றால் முடியும். பிறகு சாட்சி தன்னிச்சையாக முடியாது என்று சாட்சியம் அளிக்கிறார். மேற்படி எனது வாதுரை மற்றும் முதல் விசாரணையில் 1ம் பிரதிவாதி தடுக்கிறார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். எனது வாதுரை மற்றும் முதல் விசாரணையில் 1ம் பிரதிவாதி தடுக்கிறார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் தற்போது நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

16. தாவா சொத்தில் பி அட்டவணை சொத்தில் வழிப்பாதை இருந்ததை காண்பிக்க கிரைய பத்திரமும் UDR பட்டாவை தாக்கல் செய்யாமல் வழிப்பாதை கோரி இவ்வழக்கை பொய்யான சங்கதிகளை கொண்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 அ அட்டவணை சொத்திற்கான புல வரைபடத்தில் வழிபாதையை பற்றி சொல்லாமல் நடைபாதை பற்றி குறிப்பிட்டுள்ளது. ஆனால் நான் இவ்வழக்கை வழிப்பாதை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கை தாக்கல் செய்த போது அது வழிப்பாதையாகதான் இருந்தது.

17. இவ்வழக்கை தாக்கல் செய்த பின்னர் வழக்கறிஞர் ஆணையர் தாவா சொத்தை முதலில் பார்வையிட்ட போது எப்படி இருந்ததோ அப்படியேதான் இன்றைக்கும் உள்ளது என்றால் சரியல்ல. அரசு உத்தரவுப்படி வழிப்பாதை இருந்திருந்தால் உட்பிரிவு சர்வே எண். கொடுத்திருப்பார்கள், ஆனால் வா.சா.ஆ.9ல் மேற்படி உட்பிரிவு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. உட்பிரிவு கொடுத்துள்ளார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.9ல் வழிக்கான உட்பிரிவு எங்கு உள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு மேற்படி வரைபடம் எனக்கு புரியவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார்.

18. மேற்படி 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தைதான் அனுபவித்து வருகிறார்கள் என்றாலும், மேற்படி சொத்தில் எப்போதும் வழிப்பாதை இருந்தது இல்லை என்றாலும், அவர்கள் மேற்படி வழிப்பாதையை அழித்து விட்டதாக சொல்லி உள்ளது பொய் என்றால் வழிப்பாதை இருந்தது உண்மை. வழியை எடுத்ததும் உண்மைதான். நான் சொல்லிய அனைத்தும்

பொய் தாவாவை யூகத்தின் அடிப்படையில்தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் தாவா சட்டப்படி செல்லாது என்றாலும் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/-D.V.Koperundevi
District Munsif,
District Munsif Court,
Arni.